முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இசைஞானியார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.11.2018, வியாழக்கிழமை

1. **சக்திமிகு தருமபலம் கொண்ட**
   **சடாட்சர சூட்சும குருராசனே**
   **பக்திமிக உன்னை வணங்கிவர**
   **பரமானந்த கதி உலகோர் பெறுவரென**
2. எனக் கூறி ஒளி சூட்சும நூலை
   இயம்பிடுவேன் **விளம்பி துலை திங்கள்**
   **ஞானம்பட இருபானாற் நவதிகதி குரு வாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 29ம் நாள் 15.11.2018, வியாழக்கிழமை)**
   **நாட்டிடுவேன் இசைஞானியார் நாயனார் யானும்**
3. யானும் மக்களெல்லாம் வளமுற
   உயர்வு பெற வேண்டியுரைப்பேன்
   தானமாம் அன்னதானமதை
   தவபலம் கொண்டு செய்யும் அரங்கா
4. அரங்கனே உன் சேவையதும்
   ஆறுமுகனார் சேவையப்பா
   வரங்கள் பெற்ற மக்களே
   வணங்கி உன் சேவை சேர நேரும்
5. நேருமை கொண்ட மக்களின்
   நிதிகளே உன் தருமம் வளர்க்கும்
   வறுமை நிலை மக்களும் கூட
   வணங்கி உன் சேவை சேர
6. சேர்ந்து உடல் உழைப்பும்
   சிந்தை வைக்க உன் திருவடியை
   நேர்ந்திடும் வளர்ச்சி நிலைகள்
   நெருக்கடிகள் இல்லா பெருமைமிக்க
7. பெருமைமிக்க வளர்ச்சி கண்டு
   பொருள் வளம் சகல வளமடைவர்
   ஆறுதல்பட உள் வெளிப்பணியென
   அரங்கமகான் புகழை பரப்பி
8. புகழ் பரப்பும் தொண்டர்கட்கும்
   பொருளீட்டும் மெய் அன்பர்கட்கும்
   செகமதனில் குருவருள் துணைவர
   செயம் காணும் எல்லா வகையும்
9. வகைபட குருவடி சரணம்
   வளமுற சன்மார்க்க நெறியென
   மிகைபட உலகோர் வணங்கி
   முன்மொழிந்து தொண்டு வழி இணைய

10. இணைய கலிகால கஷ்டமெல்லாம்
இருக்குமிடம் தெரியா அகலும்
துணைபட அரங்கன் சீடர்கட்கு
தெய்வ பலம் பெருகி வளர்ந்து

11. வளர்ச்சிகளும் வல்லமைகளும்
வரலாறு படைக்கும் மாற்றங்களும்
தளர்வில்லா ஆறுமுகனார் தயவால்
தரணியோர்க்கு நடந்தேறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் இசைஞானியார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமபலம் கொண்டிட்ட சடாட்சரனாம் முருகப்பெருமானின் சூட்சும குருராசனே அரங்கமகா தேசிகனே பக்திமிக்க உம்மை வணங்கிவர உலக மக்களெல்லாம் பரமானந்த நிலையை அடைந்து சிறப்படைவார்கள் என ஆறுமுக அரங்கனின் பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி உலக மக்களெல்லாம் வளம்பல பெற்று உயர்வடைய வேண்டியே **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 29ம் நாள் 15.11.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே இசைஞானியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் இசைஞானியார்.

தாம் பல ஜென்மங்களில் செய்திட்ட தவபலனை தானத்தில் சிறந்திட்ட அன்னதானமாய் மாற்றி உலகின் தருமபலத்தை அதிகப்படுத்தும் ஆறுமுக அரங்கமகா தேசிகா உமது தொண்டுகள் எல்லாம் முருகப்பெருமானே செய்கின்ற தொண்டுகளப்பா. பல ஜென்மங்களில் வரம் பெற்று தொண்டு செய்வதற்கு வந்திட்ட மக்களே உமது திருவடி வணங்கி அற்புதமான உமது தொண்டுகளை செய்திடுவார்கள். நேர்மைமிக்க மக்கள் தருகின்ற பொருளுதவிகள் மட்டுமே உமது தர்மத்தினை வளர்க்கும். வறுமையான நிலையில் உள்ள மக்களும் கூட, வணங்கி உமது தொண்டுகளை செய்திட உமது திருவடி பணிந்து உம்முடன் இணைந்து தொண்டுகளை செய்ய உடல் உழைப்பை தந்து தொண்டுகளை செய்திட அவர்களது நிலைகளும் மாறி உயர்வான நிலைகளை அடைந்திடுவார்கள். நெருக்கடிகள் ஏதும் இல்லாத பெருமைமிக்க வளர்ச்சியை அடைந்து பொருள் வளம் பெறுவார்கள், சகல வளங்களையும் பெற்று சிறப்படைவார்கள்.

அரங்கன் வாழும் ஓங்காரக்குடிலிலும், ஓங்காரக்குடிலைச் சார்ந்தும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் புகழைப் பரப்பி தொண்டுகள் செய்கின்ற தொண்டர்களுக்கும் அன்பர்களுக்கும் குருவருள் துணையாக இருந்து வெற்றிகளைத் தந்தருளும், எல்லா வகையிலும் அவர்கள் வெற்றிகளை காண்பார்கள்.

முறையோடு உலக மக்களெல்லாம் குருவடியே சரணம் என்றே அரங்கன் திருவடிகளிலே சரணடைந்து சன்மார்க்க நெறியினை ஏற்று உலக மக்கள் ஞானிகளை எந்த அளவிற்கு அதிகமாக வணங்கி தொண்டுகளை செய்து வருகின்றார்களோ அந்த அளவிற்கு கலியுக துன்பங்களிலிருந்து விடுபடுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்திட்ட தொண்டர்களுக்கு அரங்கன் துணையுடன் தெய்வபலம் பெருகி வளர்ந்து நல்வளர்ச்சிகளை அடைவதோடு வல்லமைகளும் பெருகிடும். அவர்களால் உலகினில் வரலாறு படைக்குமளவில் மாற்றங்கள் உருவாகி முருகப்பெருமானின் தயவினால் உலக மக்கள் சகலவளமும் பெற்று சிறப்புடன் வாழ்வார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் இசைஞானியார்.

–சுபம்–